செய்தி வெளியீடு எண்:479 நாள்:13.10.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் **திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்** அவர்கள் தலைமையில் 13.10.2016 அன்று காலை 11.00 மணிக்கு துறையின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் மத்திய அரசு 44,185 குடிசை மாற்று வாரியம் குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கியது. தற்போது 18,390 வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. மற்ற பணிகளை துரிதமாக செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அதிகாரிகளை அறிவுறுத்தினார்கள்.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் **மாண்புமிகு அம்மா** அவர்கள் அறிவித்த 110 விதியின் கீழ் கிளாம்பாக்கத்தில் தென் மாவட்டங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் சிரமமின்றி பயணம் மேற்கொள்ள ஏதுவாக தற்போது வருவாய்துறையால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு நிலத்தினை ஒப்படைத்துள்ளனர். அதில் பேருந்துமுனையம் அமைக்கத் தேவையான வடிவமைப்பு குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

சாத்தங்காட்டில் கனரக வாகன நிறுத்தமுனையம் அமைப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டு, துரித நிலம் கையகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடம் கலந்தாலோசித்தார்.

மேலும் கோயம்பேட்டில் உள்ள காய்கனி, மலர் அங்காடிகளை முறைப்படுத்த தேவையான நடவடிக்கைளுடன், அதுபோன்று

அங்காடிக்குள்ளேயும், வெளியேயும் போக்குவரத்தினை சீர் செய்வது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் வீட்டுவசதி வாரியத்தின் செயல்பாடுகளுடன் அனைத்து திட்டங்களின் செயலாக்கம் குறித்தும், மேலும் லாயிட்ஸ்காலனி பகுதி–1 ல் உள்ள குடியிருப்பினை இடித்துவிட்டு பன்னடுக்கு மாடி குடியிருப்பு கட்டுவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் மதுரை மாவட்டத்தில் தோப்பூர்–உச்சப்பட்டியில் நடைபெறும் துணைகோள் நகரப் பணிகளை துரிதப்படுத்தவும் அதில் மேற்கொள்ளபடவுள்ள குடிசைப்பகுதி மாற்று வாரியம் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவுனருக்காக குடியிருப்புகள் கட்டுவதற்கும் 4500. பயனாளிகள் பட்டியலை இறுதி செய்யவும் கூட்டு கூட்டம் விரைவில் மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ் இ.ஆ.ப., செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, திரு.ஷம்பு கல்லோலிகர் இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரியம், ஆணையர் (பொ.), நகர்ப்புற வளர்ச்சித் துறை திரு. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், திரு. மதிவாணன் இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் துறை அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.

இக்கூட்டத்தில் துறையின் வளர்ச்சிப்பணிகள் விரைந்து முடிக்கவும், துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**